**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 121/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : | முத்துலெட்சுமி | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2024

---

**முதல் விசாரணை**

நான் உசிலம்பட்டி கீழப்புதுாரில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் மற்றும் அரசுத்தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். கடந்த 2017ம் ஆண்டு 09வது மாதம் 09ம் தேதி மதியம் 1.30 மணியளவில் மதுரை – தேனி ரோட்டில் ரோட்டை கடப்பதற்காக ஒச்சாத்தேவர் தெரு வழியாக காளியம்மன் கோவில் வந்து நின்று கொண்டிருந்தேன். நான் நடத்தி விறகுகடைக்கு செல்வதற்காக நின்றுகொண்டிருந்தேன். பொன்மலர் அப்பொழுது ஒச்சாத்தேவர் தெரு அருகே வந்து கொண்டிருந்தார். எதிரி உதயக்குமார் அவரது மனைவியை பின்னால் அமரவைத்து இருசக்கர வாகனத்தில் வண்டியை உழட்டிய படி ஓட்டிவந்தார். ஓட்டி வந்து நடந்து வந்த பொன்மலர் மீது மோதியதில் பொன்மலர் எனது கால் அருகே வந்து விழுந்த அவருக்கு தலைக்கு பின்னால் அடிப்பட்டு ரத்தம் அதிகமாக வந்தது. எதிரியின் மனைவி நடுரோட்டில் கீழே விழுந்துவிட்டார். அவருக்கு முகத்திலும் தலையிலும் அடிப்பட்டது. என்னுடன் வந்த கௌசல்யாவும் நானும் உதயக்குமார் மனைவியை துாக்கி காளியம்மன் கோவில் அருகே உட்கார வைத்து தண்ணீர் தெளித்து போக்கு ஆட்டோவில் ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என்னுடன் எதிரி உதயக்குமாரும் மருத்துவமனைக்கு வந்தார். பொன்மலர் பேச்சுமூச்சு இல்லாமல் சீரியசாக இருந்தார் பாலா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எதிரியின் மனைவியை மேல் சிகிச்சைக்காக மதுரைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். எதிரியின் மனைவி 3 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். புகார்தாரர் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள் கையெழுத்து வாங்கினார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் பெரிய பூசாரி தெருவில் குடியிருக்கிறேன். பெரிய பூசாரி தெரு கிழமேல் ரோட்டிற்கு வடமேல் உள்ளது என்றால் சரிதான். காளியம்மன் கோவில் எங்கள் தெருவிற்கு நேராக ரோட்டிற்கு தெற்கே உள்ளது. காளியம்மன் கோவிலுக்கு கிழக்கே அய்யன் மரக்கடை உள்ளது. அன்றைய தினம் எடப்பாடி பழனிசாமி வருவதாக சொல்லி நிறைய மக்கள் கூட்டமாக போய் கொண்டிருந்தார்கள். என்னுடன் கௌசல்யா என்ற பெண்ணும் இருந்தார். நான் ஒச்சாத்தேவர் தெருவிலிருந்து வந்து கொண்டிருந்தேன். காயம்பட்ட பொன்மலர் கண்ணன் தியேட்டர் அருகே வசிக்கிறார். பொன்மலர் கிழக்கிலிருந்து வந்து என்னை கடந்து செல்லும் போது அடிப்பட்டு என் கால் அருகே ஒச்சாத்தேவர் தெருவில் ஆண்டியின் வீட்டுக்கு அருகே விழுந்தார். ஒச்சாத்தேவர் தெரு காளியம்மன் கோவிலுக்கு மேற்கே கிழமேலாக செல்கிறது என்றால் சரிதான். பொன்மலர் அடிப்பட்டு கால் அருகே விழுந்தார் அதற்கு முன்பு எதிரி வண்டியை ஓட்டி வருவதை பார்த்தேன். நான் ஒச்சாத்தேவர் தெரு அருகே நின்று கொண்டிருந்த போது எதிரி கிழக்கிலிருந்து வண்டி ஓட்டிவருவதை பார்த்தேன். நான் ரோட்டில் மண் பகுதியில் நின்றிருந்தேன். எதிரியின் மனைவி காளியம்மன் கோவில் அருகே வந்து விழுந்துவிட்டார். அப்போது ஒரு பேருந்து கிராஸாகி ஓரமாக நின்றிருந்தது. இறந்த ஜெயலெட்சுமி எனது பக்கத்து வீட்டுக்காரர் எனக்கு அக்கா முறை வேண்டும். அடிப்பட்டவுடன் நிறைய பேர் கூடிவிட்டார்கள். பொன்மலரோடு நான் மருத்துவமனை செல்லவில்லை அவரை பார்க்கவில்லை. பொன்மலரோடு அவரது தங்கச்சியும் வந்திருந்தார். பொன்மலர் தங்கைக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. நான் தெருவிலிருந்து வந்து வடக்கு பார்த்தார்போல் நின்றிருந்தேன். போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரிக்கும்போது எதிரி இருசக்கர வாகனத்தை உழட்டி உழட்டி வாகனம் ஓட்டி வந்தார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் ஒச்சாத்தேவர் தெரு அருகே நான் நின்றிருந்தபோது இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பொன்மலரும் அவரது சகோதரியும் என்னை தாண்டி மேற்கே செல்லும் போது எதிரியின் வாகனத்தால் மோதப்பட்டு எனது கால் அருகே விழவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மனைவியும் காளியம்மன் கோவில் அருகே காயத்துடன் கீழே விழவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் போலீசாரிடம் எந்த கையெழுத்தும் போடவில்லை

என்றும் நான் போலீஸ் விசாரணையில் நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சங்கதியும் சொல்லவில்லை என்றும் இறந்தவர் எனது வீட்டிற்கு அருகே குடியிருந்து வருவதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S.d./Muthulakshmi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.